**2. திரு.கிருஷ்ணன், தொட்டபிளிமுத்திரை கிராமம்::**

திரு. கிருஷ்ணன் அவர்கள், இந்நிறுவனத்தினர் ஏற்கனவே, பல குவாரிகளை நடத்தி, இவ்விடத்திற்கு வந்துள்ளனர். மேலும், எந்த சூழ்நிலையிலும், மாடு மேய்ப்பவர்களுக்கும், விவசாயம் செய்யும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் எந்தவொரு இடையூறு இல்லாமல், குவாரி பணியை நடத்தி வந்துள்ளனர். மேலும், பள்ளியில் படிப்பவர்களுக்கு உதவி செய்து வருகிறார். இக்குவாரி அமைப்பதற்கு நான் ஆதரவு அளிக்கறேன் மற்றும் ஊர் பொதுமக்களும் இக்குவாரி வருவதை வரவேற்கின்றனர் என்று கூறினார்.

**3, திரு. C.வெங்கடாசலபதி, காரண்டப்பள்ளி கிராமம்::**

திரு. C. வெங்கடாசலபதி அவர்கள், தி/ள். S.R.A. கிரானைட்ஸ் நிறுவனம் மிகவும் உதவிகரமாகவும், எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். மேலும், இக்குவாரி வருவதற்கு தனது ஆதரவை வழங்குவதாக கூறினார்.

**4, திருமதி, ராமக்கா, தொட்டபிளிமுத்திரை கிராமம்:**

திருமதி. ராமக்கா அவர்கள், ஏரி வேலை மற்றும் கூலி வேலை செய்து வருவதாகவும் மற்றும் இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

